சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

<u>முன்னிலை</u> : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ம் நாள் திங்கட்கிழமை

**<u>இ.நி.ம.எண்.2/2025</u>**

**<u>இன்</u>**

**<u>அசல் வழக்கு எண்.81/2017</u>**

சகாதேவன்

.... மனுதாரர்/7 ம் பிரதிவாதி

**//எதிராக//**

1. பொன்னுரங்கன்
2. பொன்மணி

... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 13.10.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.காந்தி,பி.காம்.,எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.வி.சிங்காரம்,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

1. மேற்படி அசல் வழக்கு எண்.81/2017 தாவாவில் கடந்த 11.12.2017 தேதியன்று மனுதாரர்/7 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13 ன் கீழ் மனுதாரர்/7 ம் பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்: -</u>**

(i) தான் இம்மனுவில் மனுதாரர் என்றும், தாவாவில் 7 ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்கள் தாவாவில் வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்கள் தனது உடன்பிறந்த



R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:41:42 +0000

சகோதரனும் தாவாவில் 3-ம் பிரதிவாதியுமான பார்தீபன் என்பவரின் குமாரன் மற்றும் குமார்த்தி ஆவார்கள் என்றும், தனது தாயாரை தான் தான் சவரட்சனை செய்து மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்று பாதுகாத்து வருகின்றேன் என்றும், தனது தாயார் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு கிரையம் பெற்ற அவரது தனிப்பட்ட நிலத்தை தனக்கு 16.05.2013 தேதியில் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக எழுதிக்கொடுத்து தன்னுடைய தனி அனுபவத்தில் ஒப்படைத்துள்ளார் அதை அனுசரித்து மேற்படி சொத்துக்கான பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற அனைத்து வருவாய் துறை ஆவணங்களும் தன் பெயரிலேயே இருந்து வருகின்றது என்றும், நிறைய செலவு செய்து நிலத்தை சீர்திருத்தம் செய்து கந்தாயம் முதலியவற்றை செலுத்தி அனுபவித்து வருகின்றேன் என்றும்,

(ii) தன் தாயார் தன் மீது எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து தனது சகோதரர்களுக்கும் நன்கு தெரியும் என்றும், தன் தாயாரை நாள் சவரட்சனை செய்து வந்ததால் தன் மீது எழுதி வைத்தது நியாயமானது சரியானது என்பதால் என்னுடைய அனுபவத்திற்கு இதுநாள் வரையில் யாகும் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றும், தனக்கும் தனது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து சுமார் 15 1/2 ஏக்கர் நிலம் கிணறு பம்பு செட் ஆகியவைகள் பொய்யப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றும், தானும் தனது சகோதரர்கள் பூர்வீக சொத்திலேயே ஆளுக்கொரு பகுதியில் குடியருந்துக்கொண்டு சாகுபடி செய்து வருகின்றோம் என்றும்,

(iii) தங்களுக்குள் பூர்வீக சொத்து குறித்து பாகப்பரிவினை செய்துக்கொள்ள ஊர் பொதுவர்கள் மூலம் பேசிவந்ததில் தனது சகோதரர்கள் சரியாக ஒத்துழைக்காமல் எதிர்மனுதாரர்கள்/வாதிகளை கைபாவையாக வைத்து பூர்வீக சொத்துக்கள் குறித்தும் தனக்கு தானமாக கொடுத்த சொத்தையும் சேர்த்து பாகப்பிரிவினைக்ககாக சுமார் 3 1/4



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:41:46 +0000

வருடங்களுக்கு முன்பு தாவா /தாக்கல் செய்திருந்தனர் என்றும், தனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்தததை அனுசரித்து தன் வழக்கறிஞர் திருமதி.சாந்தி அவர்களிடம் தனக்காக ஆஜராகுமாறு தெரிவித்திருந்தேன் என்றும்,

(iv) மேற்படி சங்கதி அறிந்து தனது சகோதரர்களும், வாதிகளும் ஊரிலுள்ள பெரியவர்களை வைத்து பைசல் பேசிக்கொள்ளாமென்றும், வாதிகள் எந்த உரிமையும் நீதிமன்றத்தில் கோர போவதில்லை என உறுதிகூறியும், மேற்படி வழக்கை வழக்கறிஞர் வைத்து நடத்துவதில்லை என்றும் தள்ளுபடி செய்ய விட்டுவிடுவிதாகவும் வாதிகளும் அவர்களது தகப்பனார் பார்த்திபனும் தன்னிடம் தெரிவித்தனர் என்றும், தான் படிப்பறிவில்லாத ஏழை விவசாயி. எனது அண்ணன்மார்கள் மற்றும் வாதிகள் கூறியதை நம்பி தான் திருமதி.சாந்தி வழக்கறிஞர் மூலம் வக்காலத்து எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து எதிர்வழக்காடவில்லை என்றும்,

(v) மேற்படி வழக்கை வாதிகளும் தனது சகோதரர்களும் தள்ளுபடிக்கு விடப்போதாக கூறியதால் மேற்படியார்களின் வாக்குறுதியை நம்பியும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிர்வழக்காடாமல் இருந்துவிட்டேன் என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளோ அவர்களது தந்தையோ தனக்கு தான பத்திரம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்திலோ, பாகம் பிரிக்கப்பட்டாத பூர்வீக சொத்தில் ஒரு பகுதியை அனுபவிப்பதிலோ, அதில் குடியிருப்பதிலோ எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றும், மீண்டும் சுமார் 1 வருடம் கழித்து தனக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்த பிறகு வாதிகளிடமும் தனது சகோதரர்களிடமும் கேட்டதற்கு வழக்கை வாபஸ் வாங்குவதற்காக அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றும் அதற்கு தான் செல்ல வேண்டியதில்லை என்றும், வாதிகள் சென்று வாபஸ் பெற்றுக் கொள்வார்கள் என்றும் தன்னிடம் மிகவும் நம்பிக்கையாக பேசியதால் தான் நீதிமன்றத்தில் ஆஜராகாதவாறு



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:41:49 +0000

செய்துவிட்டார்கள் என்றும்,

(vi) 2019 வருடம் மே மாதம் தங்களது சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் வந்தபொழுதுதான் மேற்படி தாவாவை வாதிகள் தள்ளுபடிக்கு விடாமல் மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து சதி செய்து Exparte தீர்ப்பு பெற்ற சங்கதி தெரியவந்தது என்றும், தான் ஊர் பெரியவர்களையும், பொய்யப்பட்டி அன்பு என்பவரையும் வைத்து கேட்டதற்கு கோர்ட்டிலேயே பூர்வீக சொத்தை சமபாகமாக பிரித்துக்கொள்ளலாம் என்றும், அம்மா தானம் கொடுத்த சொத்தில் தாங்கள் பாகம் கோருவதில்லை என்றும் கூறி, இன்று, நாளை என காலம் கடத்தி வந்ததார்கள் என்றும், கொரனா நோய் தொற்றின் காரணமாக மேலும் பல மாதங்கள் கால தாமதம் செய்து வந்ததால் தான் அரூரில் வழக்கறிஞரை சந்தித்து மேற்படி வழக்கு விவரம் அறிந்து சொல்லும்படி கேட்டத்தில் தனது வழக்கறிஞர் சமூகம் நீதிமன்றத்தில் தாவா மற்றும் மனு நகல்களை பெற வேண்டி 28.07.2020 தேதியில் விண்ணப்பித்ததில் 01.09.2020 தேதியில் அதன் நகல்கள் கிடைக்க பெற்ற பிறகு எதிர்மனுதாரர்கள் மற்றும் தனது சகோதரர்களின் மோசடி செயல் தெரியவந்தது என்றும்,

(vii) மேற்படி தாவாவில், 07.08.2017 தேதியில் ஆஜராக வேண்டியிருந்ததில் திருமதி. சாந்தி வழக்கறிஞர் தனக்காக ஆஜராவதாக தெரிவித்ததை ஏற்று 07.09.2017 தேதியில் வாய்தாவாகியிருந்தது. ஊரில் பைசல் செய்வதாகவும் வழக்கை வாபஸ் பெறுவதாகவும் கூறியதால் தான் வழக்கறிஞருக்கு வக்காலத்து செய்து கொடுக்கவில்லை. மற்ற பிரதிவாதிகளும் ஆஜராகாமல் 07.09.2017 தேதியில் தன்னை தோன்றாதரப்பினராக்கப்பட்டு 09.10.2017 தேதியில் 6 ம் பிரதிவாதியும் தோன்றாதரப்பினரானதில் 6.11.2017 தேதிக்கு Exparte Evidence-க்காக உத்தரவாகி, 11.12.2017 தேதியில் Exparte தீர்ப்பு பெற்றுள்ளனர் என்றும், அதனடிப்படையில் IA 339/18-ல்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:41:52 +0000

நீதிமன்ற ஆணையர் நியமிக்க இறுதிநிலை தீர்ப்பாணைக்காக மனு தாக்கல் செய்ததில் மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்கள் அனைவரும் 16.08.2018 தேதியில் தோன்றாதரப்பினராக்கப்பட்டு 05.12.2018 தேதியில் நீதிமன்ற ஆணையரை நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும்,

(viii) எனவே தனது வழக்கறிஞர் மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்பாணையை ரத்து செய்யவும் அது ரத்து செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க மனு தாக்கல் செய்ய வேண்டுமென்றும் இறுதி நிலை தீர்ப்பாணை மனுவில் ஏற்பட்ட உத்தரவையும் ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார் என்றும், மேற்சொன்ன காரணங்களால் 11.12.2017 தேதியில் தனக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய, இம்மனுவினை தாக்கல் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி தாவாவில் தனது தரப்பு எதிர் வழக்குரையும், இத்துடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் மேற்படி அசல் வழக்கு எண்.81/2017 தாவாவில் கடந்த 11.12.2017 ம் தேதியன்று தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்து தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமும், நியாயமுமாகிறது என்றும், இல்லையேல் தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

3. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பதிலுரை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**தீர்வு** : -

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:41:55 +0000

மனுவில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை எடுத்துரைத்தும் வாதிட்டனர். மனுதாரர்/7 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலம், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரை வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**6.** மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பில், தனது தாயார் சுமார் 35 வருடங்களுக்கு முன்பு கிரையம் பெற்ற அவரது தனிப்பட்ட நிலத்தை தனக்கு 16.05.2013 தேதியில் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக எழுதிக்கொடுத்து தன்னுடைய தனி அனுபவத்தில் ஒப்படைத்துள்ளார் அதை அனுசரித்து மேற்படி சொத்துக்கான பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற அனைத்து வருவாய் துறை ஆவணங்களும் தன் பெயரிலேயே இருந்து வருகின்றது என்றும், நிறைய செலவு செய்து நிலத்தை சீர்திருத்தம் செய்து கந்தாயம் முதலியவற்றை செலுத்தி அனுபவித்து வருகின்றேன் என்றும், தன் தாயார் தன் மீது எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து தனது சகோதரர்களுக்கும் நன்கு தெரியும் என்றும், தன் தாயாரை நாள் சவரட்சனை செய்து வந்ததால் தன் மீது எழுதி வைத்தது நியாயமானது சரியானது என்பதால் என்னுடைய அனுபவத்திற்கு இதுநாள் வரையில் யாகும் எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றும், தனக்கும் தனது சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து சுமார் 15 1/2 ஏக்கர் நிலம் கிணறு பம்பு செட் ஆகியவைகள் பொய்யப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றும், தானும் தனது சகோதரர்கள் பூர்வீக சொத்திலேயே ஆளுக்கொரு பகுதியில் குடியருந்துக்கொண்டு சாகுபடி செய்து வருகின்றோம் என்றும்,

**7.** தங்களுக்குள் பூர்வீக சொத்து குறித்து பாகப்பரிவினை செய்துக்கொள்ள ஊர் பொதுவர்கள் மூலம் பேசிவந்ததில் தனது சகோதரர்கள் சரியாக ஒத்துழைக்காமல்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:41:58 +0000

எதிர்மனுதாரர்கள்/வாதிகளை கைபாவையாக வைத்து பூர்வீக சொத்துக்கள் குறித்தும் தனக்கு தானமாக கொடுத்த சொத்தையும் சேர்த்து பாகப்பிரிவினைக்ககாக சுமார் 3 1/4 வருடங்களுக்கு முன்பு தாவா /தாக்கல் செய்திருந்தனர் என்றும், தனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பானை வந்தததை அனுசரித்து தன் வழக்கறிஞர் திருமதி.சாந்தி அவர்களிடம் தனக்காக ஆஜராகுமாறு தெரிவித்திருந்தேன் என்றும், மேற்படி சங்கதி அறிந்து தனது சகோதரர்களும், வாதிகளும் ஊரிலுள்ள பெரியவர்களை வைத்து பைசல் பேசிக்கொள்ளாமென்றும், வாதிகள் எந்த உரிமையும் நீதிமன்றத்தில் கோர போவதில்லை என உறுதிகூறியும், மேற்படி வழக்கை வழக்கறிஞர் வைத்து நடத்துவதில்லை என்றும் தள்ளுபடி செய்ய விட்டுவிடுவிதாகவும் வாதிகளும் அவர்களது தகப்பனார் பார்த்திபனும் தன்னிடம் தெரிவித்தனர் என்றும், தான் படிப்பறிவில்லாத ஏழை விவசாயி. எனது அண்ணன்மார்கள் மற்றும் வாதிகள் கூறியதை நம்பி தான் திருமதி.சாந்தி வழக்கறிஞர் மூலம் வக்காலத்து எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து எதிர்வழக்காடவில்லை என்றும்,

8. மேற்படி வழக்கை வாதிகளும் தனது சகோதரர்களும் தள்ளுபடிக்கு விடப்போதாக கூறியதால் மேற்படியார்களின் வாக்குறுதியை நம்பியும் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிர்வழக்காடாமல் இருந்துவிட்டேன் என்றும், எதிர்மனுதாரர்கள்/வாதிகளோ அவர்களது தந்தையோ தனக்கு தான பத்திரம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்திலோ, பாகம் பிரிக்கப்பட்டாத பூர்வீக சொத்தில் ஒரு பகுதியை அனுபவிப்பதிலோ, அதில் குடியிருப்பதிலோ எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றும், மீண்டும் சுமார் 1 வருடம் கழித்து தனக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வந்த பிறகு வாதிகளிடமும் தனது சகோதரர்களிடமும் கேட்டதற்கு வழக்கை வாபஸ் வாங்குவதற்காக அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றும் அதற்கு தான் செல்ல

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:42:02 +0000

வேண்டியதில்லை என்றும், வாதிகள் சென்று வாபஸ் பெற்றுக் கொள்வார்கள் என்றும் தன்னிடம் மிகவும் நம்பிக்கையாக பேசியதால் தான் நீதிமன்றத்தில் ஆஜராகாதவாறு செய்துவிட்டார்கள் என்றும், 2019 வருடம் மே மாதம் தங்களது சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் வந்தபொழுதுதான் மேற்படி தாவாவை வாதிகள் தள்ளுபடிக்கு விடாமல் மற்ற பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து சதி செய்து Exparte தீர்ப்பு பெற்ற சங்கதி தெரியவந்ததது என்றும், தான் ஊர் பெரியவர்களையும், பொய்யப்பட்டி அன்பு என்பவரையும் வைத்து கேட்டதற்கு கோர்ட்டிலேயே பூர்வீக சொத்தை சமபாகமாக பிரித்துக்கொள்ளலாம் என்றும், அம்மா தானம் கொடுத்த சொத்தில் தாங்கள் பாகம் கோருவதில்லை என்றும் கூறி, இன்று, நாளை என காலம் கடத்தி வந்ததார்கள் என்றும், கொரனா நோய் தொற்றின் காரணமாக மேலும் பல மாதங்கள் கால தாமதம் செய்து வந்ததால் தான் அரூரில் வழக்கறிஞரை சந்தித்து மேற்படி வழக்கு விவரம் அறிந்து சொல்லும்படி கேட்டத்தில் தனது வழக்கறிஞர் சமூகம் நீதிமன்றத்தில் தாவா மற்றும் மனு நகல்களை பெற வேண்டி 28.07.2020 தேதியில் விண்ணபித்ததில் 01.09.2020 தேதியில் அதன் நகல்கள் கிடைக்க பெற்ற பிறகு எதிர்மனுதாரர்கள் மற்றும் தனது சகோதரர்களின் மோசடி செயல் தெரியவந்தது என்றும்,

**9.** மேற்படி தாவாவில், 07.08.2017 தேதியில் ஆஜராக வேண்டியிருந்ததில் திருமதி. சாந்தி வழக்கறிஞர் தனக்காக ஆஜராவதாக தெரிவித்ததை ஏற்று 07.09.2017 தேதியில் வாய்தாவாகியிருந்தது. ஊரில் பைசல் செய்வதாகவும் வழக்கை வாபஸ் பெறுவதாகவும் கூறியதால் தான் வழக்கறிஞருக்கு வக்காலத்து செய்து கொடுக்கவில்லை. மற்ற பிரதிவாதிகளும் ஆஜராகாமல் 07.09.2017 தேதியில் தன்னை தோன்றாதரப்பினராக்கப்பட்டு 09.10.2017 தேதியில் 6 ம் பிரதிவாதியும் தோன்றாதரப்பினரானதில் 6.11.2017 தேதிக்கு Exparte Evidence-க்காக உத்தரவாகி,



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.10.13 17:42:06 +0000

11.12.2017 தேதியில் Exparte தீர்ப்பு பெற்றுள்ளனர் என்றும், அதனடிப்படையில் IA 339/18-ல் நீதிமன்ற ஆணையர் நியமிக்க இறுதிநிலை தீர்ப்பாணைக்காக மனு தாக்கல் செய்ததில் மேற்படி மனுவில் எதிர்மனுதாரர்கள் அனைவரும் 16.08.2018 தேதியில் தோன்றாதரப்பினராக்கப்பட்டு 05.12.2018 தேதியில் நீதிமன்ற ஆணையரை நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே தனது வழக்கறிஞர் மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்பாணையை ரத்து செய்யவும் அது ரத்து செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க மனு தாக்கல் செய்ய வேண்டுமென்றும் இறுதி நிலை தீர்ப்பாணை மனுவில் ஏற்பட்ட உத்தரவையும் ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார் என்றும், மேற்சொன்ன காரணங்களால் 11.12.2017 தேதியில் தனக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய, இம்மனுவினை தாக்கல் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி தாவாவில் தனது தரப்பு எதிர் வழக்குரையும், இத்துடன் இணைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றும் மனுதாரர் தனது தரப்பில் கூறியுள்ளார்.

**10.** மேலும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது ஏற்கனவே மனுதாரர்/7 ம் பிரதிவாதி தரப்பில் காலவரையறை சட்டம் பிரிவு 5 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு செலவுத்தொகையுடன் கடந்த 04.08.2025 ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இந்த மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக**, இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர்/7 ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 11.12.2017 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.10.13 17:42:09 +0000

உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.10.13 17:42:13 +0000

சார்பு நீதிபதி,

அரூர்.

<u>**இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்**</u> : -

-- இல்லை -

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.10.13 17:42:16 +0000

சார்பு நீதிபதி,

அரூர்.